பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 13 செவ்வாய்க்கிழமை 28.12.2021 கதிர் 53

## இனி இது ரகசியம் அல்ல!

அண்மைக் காலத்தில் இலங்கை அரசியலில் பரபரப்பை ஏற்படுத்திய விவகாரம் சீனத் தூதுவரின் யாழ்.விஜயம். அதையொட்டிய விடயங்கள், தகவல்கள் இன்னும் விவரமாகப் பேசப்படுகின்றது.

அதில் ஒன்று பக்கம்02

# குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டுவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சூளுரை



ராஜபக்ஷக்களின் குடும்ப ஆட்சிக்கு விரைவில் முடிவு கட்டுவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சூளுரைத்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து தயாரிக்கப்பட்ட 'குடும்ப ஆட்சி நாட்டை அழிக்கும்' என்ற துண்டுப் பிரசுரத்தை அம்பலாந்தோட்டைப் பகுதியில் நேற்று விநியோகம் செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். ☞2

## 17 பேர் சாவு!



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 17 பேர் சாவடைந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் இந்தச் சாவுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு சாவடைந்த 17 பேரில் 11 ஆண்களும், 06 பெண்களும் அடங்குகின்றனர்.

இதையடுத்து நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 901 ஆக அதிகரித்துள்ளது.

## நான்காவது தடுப்பூசி; இன்னும் முடிவில்லை

### ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு

கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்காக இலங்கையர்களுக்கு நான்காவது தடுப்பூசியை ஏற்றுவது தொடர்பில் இன்னும் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போதுதான் மக்களுக்கு மூன்றாவது தடுப்பூசி வழங்கப்பட்டுவருகின்றது. அந்த பணி இன்னும் முடிவடையவில்லை. எனவே, 4ஆவது தடுப்பூசி தொடர்பில் தற்போது முடிவெடுக்க முடியாது.

கிடைக்கப்பெறும் தரவுகளை அடிப்படையாகக்கொண்டே, அது தொடர்பான பரிந்துரையை நிபுணர்குழு முன்வைக்கும். இன்னும் அவ்வாறானதொரு ☞2

## 2022 ஏப்ரலில் ஆட்சி மாற்றம்!

### ஆளுங்கட்சி எம்.பி. விஜயதாஸ ஆரூடம்



நாட்டு நிலைமை மோசமாகவுள்ளது. அடுத்த வருடம் ஏப்ரலில் ஆட்சி மாற்றம் ஏற்படக் கூடும்.

- இவ்வாறு ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ச ஆரூடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் தற்போது மிகவும் மோசமான சூழலே நிலவுகின்றது. மக்கள் மத்தியில் நெருக்கடியும், வன்முறையும் ☞2

## கிம்புலாபிட்டியவில் விமானம் விபத்து!

### மூவர் காயம்

பயணிகள் இலகுரக விமானம் ஒன்று நேற்று அவசரமாக தரையிறக்கப்பட்டபோது ஏற்பட்ட விபத்தில் மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விமானத்தில் திடீரென ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கட்டான, ☞2

## சகுராய் விமான சேவைகள் அனைத்தும் இடைநிறுத்தம்

### சிவில் விமான சேவை அதிகார சபை பணிப்பு

கொழும்பு, டிசெ. 28

சகுராய் விமான சேவையின் அனைத்து சேவைகளையும் நேற்றிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்துமாறு சிவில் விமான சேவை அதிகார சபை தெரிவித்துள்ளது.

சிவில் விமான சேவை இராஜாங்க அமைச்சர் டி.வி சானக இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி, மறு அறிவித்தல் வரை அந்த நிறுவனத்தின் அனைத்து விமான சேவைகளும் இடைநிறுத்தப்படுகின்றன என இராஜாங்க அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

## மாட்டுடன் மோதியது ஓட்டோ; மூவர் வைத்தியசாலையில்!



(வவுனியா நிருபர்)

வவுனியா, புளியங்குளம் ஏ-9 வீதியில் மாட்டுடன் ஓட்டோ மோதுண்டு குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்துள்ளனர் என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:- ☞2

## மன்னார் பிரதேச சபை 'பட்ஜட்' நேற்று தோல்வி

(ந.லோகதயாளன்)

மன்னார் பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்று தோற்கடிக்கப்பட்டது.

மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் மீது மோசடிக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு முன்னாள் ஆளுநரின் விசாரணையின் பின்பு பதவி பறிக்கப்பட்டபோதும் தற்போதைய ஆளுநர் அந்தப் பதவி பறிப்பு வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்தமையால் தவிசாளர் தப்பிப் பிழைத்தார்.

இவ்வாறு தப்பிப் பிழைத்த தவிசாளர் சமர்ப்பித்த 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டமே நேற்று முதல் தடவையாகத் தோற்கடிக்கப்பட்டது.

நேற்று தோற்கடிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் மீண்டும் தோற்கடிக்கப்பட்டால் தவிசாளர் பதவி இழக்கும் நிலைமை ஏற்படும்.

மன்னார் பிரதேச ☞2

## திருமணப் பதிவுக்கான கெடுபிடி; ஆணைக்குழுவில் முறைப்பாடு!

வெளிநாட்டுப் பிரஜைகள், வெளிநாட்டு குடியுரிமை பெற்றவர்கள் இலங்கைப் பிரஜைகளைத் திருமணம் செய்யும்போது பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற இறுக்கமான கட்டுப்பாட்டை அரசு கொண்டு வந்திருப்பதை எதிர்த்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி திஷ்யா வெரகொட இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

தேசிய பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் இலங்கையில் வெளிநாட்டுப் பிரஜையின் திருமணத்தை பதிவு செய்வதற்கு சில முன் நிபந்தனைகளை விதிக்க பதிவாளர் நாயகம் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளியான செய்திகளை அடுத்து இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனது பிள்ளைகளும் வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள். ஒரு நாள் அவர்கள் திருமணம் செய்து கொள்ள விரும்பும் போது அதற்கு பாதுகாப்பு செயலாளரிடம் அனுமதி கேட்பதை நான் விரும்பவில்லை.

அவர்கள் விரும்பும் யாரையும் திருமணம் செய்து கொள்ள என் அனுமதி கூட தேவையில்லை. தாங்கள் விரும்பும் நபரை திருமணம் செய்து கொள்ள அவர்கள் ஏன் வேறு சிலரிடம் அல்லது அதிகாரத்தில் உள்ளவர்களிடம் அனுமதி பெற வேண்டும்? ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சீனத் தூதுவர் வடக்கில் வழங்கிய நிவாரணப் பொதிகள். ஒவ்வொன்றும் ஐயாயிரம் ரூபா பெறுமதியான பொருள்களுடன் இரண்டாயிரத்து ஐந்நூறு பொதிகளைத் தயார் செய்யும் படி யாழ்ப்பாணத்தின் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு 'ஓடர்' கிடைத்தது. சீனத் தூதரகத்தில் இருந்து டாண் என்று ஒரு கோடி இருபத்தியைந்து லட்சம் ரூபா காசோலையும் வந்து சேர்ந்தது.

ஒவ்வொரு பொதியிலும் பத்துக் கிலோ அரிசி, மூன்று கிலோ மா, மூன்று கிலோ சீனி, உருளைக் கிழங்கு, பருப்பு, பூடு என்று இந்தியப் பொருள்கள் எல்லாம் சேர்க்கப்பட்டன. சீனத் தூதரகம் கைகாட்டிய தரப்புக்கு முழுப் பொதிகளும் ஒப்படைக்கப்பட்டன.

அவற்றின் விநியோகம் வடக்கு அரசியல் தரப்பு ஒன்றின் வழிகாட்டலில் மீனவ அமைப்பு ஒன்றின் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது. இன்னும் மீனவர்கள் தரப்புக்கு அவை சரியாகக் கிட்டவில்லை என்று முறைப்பாடு உண்டு. உருளைக் கிழங்கு போன்றவையும் அந்தப் பொதியில் இருப்பதனால் அவற்றை நீண்ட காலம் விநியோகிக்காமல் இருக்க முடியாது. இன்னும் விநியோகித்து முடியவில்லை என்றும் கூற முடியாது.

இந்திய மீனவரின் அத்து மீறலுக்கு எதிராகக் கடந்த சனியன்று யாழ்.செயலகத்திற்கு முன்னால் வழி மறிப்புப் போர் நடைபெற்றதல்லவா? அது மீனவர்களின் போராட்டம் தானே. அதனால் அதில் பங்கு பற்றியவர்களுக்கு நிவாரணப் பொதி அதிர்ஷ்டம் கிடைத்தது.

அது மட்டுமல்ல, மீனவர்களின் பிரச்சினையைப் பிரதிபலிப்பவர்கள், வெளிக்கொணருபவர்கள் என்ற வகையில் நமது சகோதர ஊடகவியலாளர்களும் மீனவ சமூகத்தின் பிரிக்க முடியாத அங்கமாகி, அந்த நிவாரணப் பொதி பெறும் உரித்தாளர்களுமாகி விட்டனர். நாற்பது பொதிகள் வரை விநியோகிக்கப்பட்டன என்று தகவல்.

உண்மையில் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்கள் பலவற்றுக்கு நிவாரணங்கள் கிடைக்கவில்லை என்ற முறைப்பாடு தாராளமாக உண்டு.

சீனாவின் இந்த நிவாரணப் பொதி பங்கீடு அரசியல் கண்துடைப்பு நாடகம். ஆனைப் பசிக்கு சோளப் பொரி கதை தான். அது கூட பிற தரப்புகளினால் சுவாஹா செய்யப்படுவது வேதனையிலும் வேதனை.

"ஆற்றில் வெள்ளம் பாயுது, அண்ணை பிடி, தம்பி பிடி" கதையாக சீன நிவாரணப் பொதிகள் போய் விட்டன போலும். நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடி புல்லுக்கும் ஆங்கே பொசிவது தவிர்க்க முடியாதது. ஆனால் புல்லுக்கு மட்டுமே பொசிவது நியாயமற்றது.

★ ★ ★

'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்ற விடயத்தை அடிக்கடி இப்பத்தியில் நான் எழுவதுண்டு. அந்த வரிசையில் இன்னொரு விவகாரம் இது.

சுமார் 2 பில்லியன் (இரு நூறு கோடி) அமெரிக்க டொலர் கடனுதவி ஏற்பாட்டை இலங்கைக்கு வழங்கி, இலங்கையைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து பிணை எடுக்கும் அவசரத் திட்டம் ஒன்றை இந்தியா ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகின்றது அல்லவா? இது ஒன்றும் சும்மா கடன் வழங்கும் திட்டம் அல்லவாம். சோழியன் குடுமி சும்மா ஆடவில்லைத்தான்.

திருகோணமலை சீனக்குடாவில் உள்ள 98 பாரிய எண்ணெய்த்தாங்கிகளை – குதங்களை – 55 வருட காலம் இந்தியாவுக்குக் குத்தகைக்கு வழங்கும் ஒழுங்கமைப்பின் மறுபக்கம்தானாம் இந்த கடனுதவித்திட்டம்.

இதற்காக Trinco Petroleum Terminal Limited என்ற துணை நிறுவனம் ஒன்றை இந்திய ஓயில் கம்பனியும் (எல்.ஐ.ஓ.ஸியும்) சேர்ந்து உருவாக்க இருக்கின்றன.

இந்த உடன்பாட்டின் அடிப்படையில் எண்ணெய் தாயங்கிகள் மட்டுமல்லாமல், அதை ஒட்டிய இறங்குதுறை, இயந்திரங்கள், எண்ணெய்க் கப்பல்கள் தரிப்புக்கான இடங்கள் போன்றவையும் அந்த நிறுவனத்தின் கட்டுபாட்டுக்குள் அடுத்த 55 வருடங்களுக்கு இருக்கும்.

இதற்கான உடன்பாடு கைச்சாத்திடும் போது இலங்கைக்கு இந்தியாவின் ஐம்பது கோடி அமெரிக்க டொலர் கடன் உதவி வழங்கும் ஒப்பந்தமும் சேர்ந்து மேற்கொள்ளப்படும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

நாட்டின் வளத்தை அடகு வைத்து கடன் வாங்கும் கடைசிக் கட்டத்துக்கு நாடு வந்து விட்டதற்கு இது நல்லதொரு உதாரணம்.

– மின்னல் –

---

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி (அ.இ.ம.கா) தலா 7 உறுப்பினர்களைக் கொண்டுள்ளனர். அதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் 02, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் 02, ஈ.பி.டி.பியில் 01, தமிழர் விடுதலைக் கூட்டணியில் 01, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் 01 என மொத்தமாக 21 உறுப்பினர்கள் சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

இதில் அ.இ.ம.காங்கிரஸைச் சேர்ந்த 7 உறுப்பினர்களுடன் ஈ.பி.டி.பி, கூட்டணி மற்றும் சுதந்திரக் கட்சியின் தலா ஒரு உறுப்பினர்களுமாக மொத்தம் 10 பேரின் வாக்குகள் ஆதரவாக அளிக்கப்பட்ட அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 7 பேரின் வாக்குகளும், மு.காவின் இரு உறுப்பினர்கள், சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன முன்னணியின் தலா ஒரு உறுப்பினர்களுமாக மொத்தம் 11 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டதன் அடிப்படையில் வரவு – செலவுத் திட்டம் நேற்று தோற்கடிக்கப்பட்டது.

---

## கிம்புலாபிட்டியவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கிம்புலாபிட்டிய பகுதியில் விமானத்தை தரையிறக்க விமானி நடவடிக்கை எடுத்தார் என்று விமான சேவை நடவடிக்கை பணிப்பாளர் ஹொன் சுமனசேகர தெரிவித்துள்ளார்.

விபத்தில் இரண்டு விமானிகள் மற்றும் பெண் ஒருவர் அடங்களாக மூவர் காயமடைந்து நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதற்கு சில நாட்களுக்கு முன்னர், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இலகுரக விமானம் ஒன்று பயாகல கடற்கரையில் அவசரமாக தரையிறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

## குடும்ப ஆட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டு மக்கள் நெருப்புடன் கூடிய துன்பத்தில் வாழ்ந்து வருகின்றனர்

மக்கள் நெருப்புக்குப் பதிலாக நெருப்பால் எரிகின்றார்கள்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் டொலர் மாபியாவின் கைப்பாவை .

அவர் நாட்டின் அனைத்துப் பிரஜைகளுடனும் ஏற்றுமதியாளர்களுடனும் விளையாடுகின்றார்.

அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழிக்கும் பணியை முன்னெடுத்த ஒருவர் பதவி விலகியுள்ளார்.

எனினும், நாட்டின் பொருளாதாரத்தை அழித்த குற்றத்துக்கான பொறுப்பில் இருந்து அவர்களால் விடுவிக்க முடியாது – என்றார்.

# போலி நாணயத்தாள்கள்; மக்களே மிக அவதானம்!

### மத்திய வங்கி அறிவுறுத்து

கொழும்பு, டிசெ. 28

இலங்கை முழுவதும் போலி நாணயத் தாள்கள் அதிகளவில் புழக்கத்தில் உள்ளதால் பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு இலங்கை மத்திய வங்கி அறிவுறுத்தியுள்ளது.

சந்தேகத்துக்கு இடமான நாணயத் தாள் ஒன்று காணப்பட்டால் பாதுகாப்புச் சின்னம் தொடர்பில் ஆராய்ந்த பின்னர் அதனைத் தம்வசம் வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு மத்திய வங்கி கேட்டுக்கொண்டுள்ளது.

நாணயத்தாளைக் கொண்டு வந்தவர், அவரது தோற்றம், வாகனத்தில் வந்தால் வாகனத்தின் விவரம், பணத்தாளின் மதிப்பு மற்றும் வரிசை எண் ஆகியவற்றைப் பதிவு செய்து அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது குற்றப் புலனாய்வுத்துறையின் போலி நாணயப் பிரிவினரின் 0112422176 மற்றும் 0112326670 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைதுத் தெரிவிக்க வேண்டும் என்றும் மத்திய வங்கி மேலும் கேட்டுக்கொண்டுள்ளது.

---

## திருமணப் பதிவுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எனவும் சட்டத்தரணி திஷ்யா வெரகொட கேள்வி எழுப்பியுள்ளார்.

புதிய முன்நிபந்தனைகள் சட்டவிரோதமானவை. சட்டத்துக்குப் புறம்பானவை, பகுத்தறிவற்றது, நியாயமற்றது, அபத்தமானது, அதிதீவிரமானவை. அத்துடன், அரசியலமைப்பிற்கு முரணானவை என்று குறிப்பிட்டுள்ள அவர், இந்த முறைப்பாட்டை முன்னுரிமையின் அடிப்படையில் விசாரிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக் குழுவை கோரியுள்ளார்.

2022 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கான திருமண விவகாரம் குறித்த சுற்றறிக்கை அமுலாகும் எனக் கூறப்படும் நிலையில், அதனை அமுல்படுத்த வேண்டாம் என்று பதிவாளர் நாயகத்துக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு கட்டளையிட வேண்டும் எனவும் திஷ்ய வேரகொட முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

2022.01.01 முதல் வெளிநாட்டுப் பிரஜாவுரிமை உடைய ஒருவர் இங்கு இலங்கைப் பிரஜை ஒருவரைத் திருமணம் செய்வதாயின் தாம் வதியும் நாட்டிலிருந்து தாம் குற்றச் சம்பவம் எதனுடனும் தொடர்பில்லாதவர் என அந்நாட்டின் பாதுகாப்புப் பிரிவிலிருந்து உரிய சான்றிதழ் பெற்று வந்து அதனை பத்தரமுல்லையிலிருக்கும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் சமர்ப்பித்து இலங்கைப் பதிவாளர் நாயகத்தின் முன் அனுமதி பெறவேண்டும் என அரசால் புதிய நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று சுகாதார நிலை பற்றிய சுய தெளிவுபடுத்தல் அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பித்தாலும் சாதாரண விவாக பதிவாளர்கள் (கிராம பதிவாளர்கள்) மூலம் பதிவு செய்ய முடியாது. பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர் மூலமே பதிவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## நான்காவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பரிந்துரை முன்வைக்கப்படவில்லை. தேவையேற்படும் பட்சத்தில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார்.

---

## 2022 ஏப்ரலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தலைதூக்கியுள்ளன. மக்களை அடக்கி அரசால் தொடர்ந்தும் முன்னோக்கிச் செல்ல முடியாது. எனவே, எதிர்வரும் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் நாடாளுமன்றத்தினுள் பாரிய ஆட்சிக் கவிழ்ப்பொன்று இடம்பெறும். அவ்வாறு இல்லையேல் அரசுக்குள் அதிகார மாற்ற புரட்சி நிச்சயம் ஏற்படும் – என்றார்.

அதேவேளை, தற்போதைய அரசின் செயற்பாடுகளையும், பொருளாதாரத் திட்டங்களையும் அவர் கடுமையாக விளாசித்தள்ளியுள்ளார்.

---

## மாட்டுடன் மோதியது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஓட்டோ ஏ – 9 வீதியூடாக மாங்குளம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போது புளியங்குளம் பகுதியில் வீதியின் குறுக்காக மாடு புகுந்ததில் ஓட்டோ சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து மாட்டுடன் மோதுண்டு குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் ஓட்டோவில் பயணித்த சாரதி உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த போக்குவரத்துப் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (100)

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# சர்வதேச விமான பயணங்களுக்கும் கட்டுப்பாடு அதளபாதாளத்தை நோக்கிச் செல்லும் இலங்கை!

இலங்கையில் தற்போது நிலவும் டொலர் நெருக்கடி காரணமாக பயணிகள் மற்றும் சரக்கு விமானங்கள் பெரும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளன என செய்தி வெளியாகியுள்ளது.

தற்போது இலங்கையின் விமான நிலையங்களுக்கு வரும் விமானங்களுக்கு டொலரில் மட்டுமே எரிபொருள் நிரப்பப்படுகிறது. அத்துடன் விமான நிறுவனங்களும் தங்கள் உள்ளூர் பிரதிநிதிகளுக்கு பெரும் தொகையான பணம் செலுத்த வேண்டியுள்ளது. அதற்கமைய, இலங்கைக்கு அனுப்பும் விமானங்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவது மற்றும் விமான பயணங்களின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பாக வெளிநாட்டுவிமானநிறுவனங்கள்பரிசீலித்துவருகின்றன.

இந்த நெருக்கடி ஐந்து மாதங்களாக நீடித்து வருகின்றது. இது தொடர்பில் தீர்வை எட்டுவதற்கு அதிகாரிகளுடன் பலதடவைகள் பேச்சு நடத்தப்பட்ட போதும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. அத்துடன் டொலரில் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, விமான டிக்கெட் மற்றும் சரக்கு விற்பனைக்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய தொகையின் சதவீதமாகும்.

இந்த நிலைமை இலங்கையின் எதிர்கால சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என நம்பப்படுகிறது.

நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் அதிக முதலீடு செய்துள்ளது. எவ்வாறாயினும், இலங்கைக்கான விமான சேவைகளுக்கு தடை விதிக்கப்பட்டால் முதலீடு செய்யப்படும் பணம் வீணாகி விடும் என சுற்றுலாத்துறையைச் சேர்ந்த வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். இலங்கைக்கு வாரத்துக்கு 12 விமானங்களை முன்பதிவு செய்து வந்த வெளிநாட்டு விமான நிறுவனங் கள், தற்போது அந்த எண்ணிக்கையை மூன்றாகக் குறைத்துள்ளன.

இதேவேளை சில விமான நிறுவனங்கள் இலங்கைக்கு விமானங்களை அனுப்புவதை நிறுத்தியுள்ளன.

இலங்கையில் சுற்றுலாத்துறையை நிலை நிறுத்துவதற்கு அரசாங்கம் விமான நிறுவனங்களுக்கு செலுத்தும் டொலர்களை எவ்வித இடையூறும், தடையும் இன்றி அதே முறையில் செலுத்த வேண்டும் என்பதே சுற்றுலாத்துறையின் கருத்தாகும்.

## ஆதனவரி செலுத்தல்

*யாழ்ப்பாணம், டிசெ.28*

*யாழ். மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 2022 ஜனவரி 1 தொடக்கம் 2022 ஜனவரி 31 ஆம் திகதி வரை 10வீத கழிவுடன் செலுத்த முடியும். அதற்கமைய வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி அலுவலக நாள்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3 மணி வரையும், வார இறுதி நாள்களிலும், விடுமுறை தினங்களிலும் (பொங்கல்தினம் தவிர்த்து) காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரையும் ஆதன வரியைச் செலுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என யாழ். மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.*

## பணி இடைநிறுத்தல்

*யாழ்ப்பாணம், டிசெ.28*

*வருட இறுதிப் பணிகளை முன்னிட்டு, எதிர்வரும் 30 . 12 . 2021 (வியாழக்கிழமை) மற்றும் 31.12.2021 (வெள்ளிக்கிழமை) ஆகிய இரு தினங்கள் யாழ்ப்பாணம் காணி மாவட்டப் பதிவகத்தின் கடமைகள் இடம்பெற மாட்டாது. மீண்டும், 03.01.2022 (திங்கட்கிழமை) வழமைபோல் அனைத்து சேவைகளும் இடம் பெறும் என யாழ். காணி மாவட்டப் பதிவாளர் அறிவித்துள்ளார்.*

## ஒமிக்ரோன் அலை நாட்டில் ஏற்படலாம்?

### மக்களுக்கு எச்சரிக்கை

நாட்டில் ஒமிக்ரோன் அலை ஏற்படக்கூடிய அபாயம் உருவாகியுள்ளது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாள்களில் ஒமிக்ரோன் அலை உருவாகும் அறிகுறிகள் நாட்டில் தென்படுகின்றன என நிபுணத்துவ மருத்துவர் வைத்தியர் மல்காந்தி கல்ஹேன தெரிவித்துள்ளார்.

இந்த பண்டிகைக் காலத்தில் மக்கள் பொறுப்புணர்ச்சியின்றி கொவிட்டை மறந்து செயற்பட்டு வருகின்றனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மிகவும் வேகமாகப் பரவும் ஒமிக்ரோன் தொற்று இலங்கையி லும் ஓர் அலையாக உருவாகக் கூடும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த ஆபத்தைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமாயின் சுகாதார வழிகாட்டல்களை உரிய முறையில் பின்பற்ற வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

## கடந்த இரண்டு ஆண்டுகளில் பதிவாகிய கணக்காய்வு விவரம்!

### வெளியாகியது அறிக்கை

இலங்கை அரசாங்கம் தற்போது எதிர்நோக்கி வரும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக டொலர் பிரச்சினை காணப்படுகின்றது.

இலங்கை எதிர்நோக்கி வரும் டொலர் பிரச்சினைகுத் தீர்வு வழங்கும் நோக்கில் சீன அரசாங்கம் 1.5 பில்லியன் டொலர்களை வழங்க உள்ளதாக அரசாங்கம் அண்மையில் அறிவிப்பொன்றையும் விடுத்திருந்தது.

இவ்வாறான சூழ்நிலையில், இலங்கை அரசாங்கம் பிற நாடுகளிலிருந்து கடன் அடிப்படையில் பெற்றுக்கொண்ட கடனை தொகையை அடுத்த மாதம் செலுத்த வேண்டியுள்ளதால் 50 கோடி அமெரிக்க டொலர் வெளிநாட்டுக் கடன் தவணைகளை மீளச் செலுத்துவதற்கு மத்திய வங்கி முன்னுரிமை அளித்து வருவதால், டொலர் தற்சமயம் வெளியிடப்பட மாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக துறைமுகத்தில் தேங்கியுள்ள சுமார் 1500 அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்களை விடுவிக்க தற்போது டொலர்களை வழங்க முடியாது என இலங்கை மத்திய வங்கி, வர்த்தக அமைச்சுக்கு அறிவித்திருந்தது.

இதன் காரணமாக நாட்டில் அடுத்த மாத மளவில் கடும் பஞ்சம், உணவுப்பற்றாக்குறை நிலவும் எனவும் தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில்,கடந்த இரண்டு வருடங்களாக இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான அறிக்கையை தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ளது.

## பாதுகாப்பு அமைச்சின் அனுமதி திருமணத்தின்போது எதற்காக?

### அரச தரப்பு விளக்கம்

வெளிநாட்டுப் பிரஜை ஒருவரை இலங்கையர்கள் பதிவுத்திருமணம் செய்து கொள்ளும் போது ஏன் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை என்பது தொடர்பாக அரச தரப்பு விளக்கம் அளித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டுமென வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கு பல்வேறு தரப்பினரும் விமர்சனங்களை வெளியிட்ட நிலையில், இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இணைப்புச் செயலாளர் கீதானாத் காசிலிங்கம் இது தொடர்பில் விளக்கம் அளித்துள்ளார்.

இலங்கைப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் வெளிநாட்டுப் பிரஜைகள் சிலர் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம், சமூக ஊடகங்களின் ஊடான சட்டவிரோத நடவடிக்கைகள் உள்ளிட்டனவற்றை இவ்வாறானவர்கள் மேற்கொள்கின்றனர் எனக் குற்றம் சுமத்தியுள்ளார்.

வறிய பெண்கள் இவ்வாறான குற்றவாளிகளால் இலக்கு வைக்கப்படுகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் குறித்த ஜனாதிபதி விசாரணைக்குழு அறிக்கையிலும் இவ்வாறான திருமணங்கள் தடை செய்யப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுப் பிரஜைகளைத் திருமணம் செய்யும் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு அனுமதி வழங்கும் நடைமுறை அமுல்படுத்த வேண்டுமென அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பை உறுதி செய்யவும், உள்நாட்டுப் பிரஜையின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டும் உலகின் பல நாடுகளில் இவ்வாறு வெளிநாட்டுப் பிரஜைகளுக்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கும் நடைமுறை அமுலில் உள்ளது என காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

## மஹியங்கனையில் விழுந்து கிடந்த பணத்தை பொலிஸில் ஒப்படைத்தான் 11 வயது சிறுவன்



மஹியங்கனை பிரதேசத்தை சேர்ந்த 11 வயதுடைய சிறுவனின் செயல் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மிகவும் வறுமையான குடும்பத்தை சேர்ந்த மாதவ கல்ஹார என்ற சிறுவன் தனது 71 வயதுடைய தாத்தாவுடன் உறவினர் வீட்டுக்குச் சென்ற போது கீழே கிடந்து ஒரு தொகை பணத்தைக் கண்டெடுத்துள்ளார்.

6 ஐயாயிரம் நாணயத்தாள்கள் வீதியில் கிடந்துள்ளன. அதன் பெறுமதி 30 ஆயிரம் ரூபாவாகும். அதனை கையில் எடுத்த சிறுவன் இந்த பணத்தை உரிமையாளரை தேடி ஒப்படைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

உரிமையாளரை எங்கு சென்று தேடுவது என தாத்தா வினவிய போது, பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்போம் என சிறுவன் கூறியுள்ளார். அதற்கமைய சிறுவன் தனது தாத்தாவுடன் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று இந்த பணத்தை ஒப்படைத்துள்ளார்.

இந்த பணத்தை ஏன் பொலிஸாரிடம் ஒப்படைக்க நினைத்தீர்கள் வீட்டுக்குக் கொண்டு சென்றிருக்கலாமே என சிறுவனி டம் பொலிஸார் வினவியுள்ளனர்.

எனது அப்பாவுக்காகத் தான் இதனை ஒப்படைக்க நினைத்தேன். அவர் மிகவும் சுகவீனமடைந்த நிலையில் உள்ளார். எனது அப்பாவும் ஒரு பொலிஸ் அதிகாரி தான். எனது தந்தை சீக்கிரம் குண மடைய வேண்டும். நான் செய்யும் இந்த புண்ணியம் எனது தந்தைக்கு சென்றடைந்து எனது தந்தை குணமடைய வேண்டும் என சிறுவன் கூறியுள்ளார். இவ்வளவு சிறந்த மகனை வளர்த்த தந்தை சீக்கிரம் குணமடைந்து விடுவார் என பொலிஸ் அதிகாரி சிறுவனிடம் கூறி அனுப்பி வைத்துள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி. யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எதேச்சாதிகாரத்தின் உச்சம்

நாட்டின் இன்றைய பெரும் பின்னடைவு நிலைக்கு மிக முக்கிய காரணம் தவறான ஆட்சி முறை என்பது பரகசியமான உண்மை.

தூர நோக்கற்ற – தீர்க்க தரிசனப் பார்வையில்லாத – சரியான அரசியல் சித்தாந்தத்தில் வளையப்படாத – அரசியல் கொள்கைப் போக்கே இன்றைய மோச நிலைக்குக் காரணமாகும்.

துறைசார்ந்த வல்லுநர்கள், நிபுணர்கள், ஆய்வாளர்களின் கருத்து நிலைப்பாட்டைக் கவனத்தில் எடுக்காமல், உதாசீனப்படுத்தி, புறமொதுக்கி, அதிகாரத் திமிருடன் செயற்படும் எதேச்சாதிகாரமே கோட்டாவின் நிர்வாகத்தில் தலை விரித்தாடுகின்றது.

நாட்டின் தலைசிறந்த கல்விமான்கள், புத்திஜீவிகள், அறிவாளிகள் ஒன்று திரண்டு 'வியத்மக' என்ற அமைப்பை உருவாக்கி, அந்தக் கட்டமைப்பு ஊடாகத்தான் கோட்டாபய ராஜபக்ஷவை முன்னிலைப்படுத்தி, அவரை ஜனாதிபதியாக்கும் கைங்கரியத்தை ஒப்பேற்றினர்.

ஆனால் அந்தப் புத்திஜீவிகளையும், கூடத் தாம் ஆட்சி அதிகாரத்தில் ஏறியதும் புறக்கணித்து விட்டார் கோட்டாபய.

உதாரணத்துக்கு நாட்டின் விவசாயத்துறையை எடுத்துக் கொள்ளலாம். கோட்டாபயவின் தேர்தல் விஞ்ஞாபனமான 'சுபீட்சத்தின் நோக்கு' ஆவணத்தைப் புத்திஜீவிகளே சேர்ந்து தயாரித்தார்கள். நாட்டின் விவசாயத் துறையைச் சேர்ந்த நிபுணர்கள் பலர் அதில் இருந்தனர். விவசாயத்துறை தொடர்பான அந்த விஞ்ஞாபன வாசகங்கள் நீண்ட வாதப் பிரதிவாதங்கள், ஆராய்வுகளின் பின்னரே கட்டமைக்கப்பட்டன. நாட்டின் விவசாய நிலைமையின் சாதக, பாதகங்கள், யதார்த்தப் புறநிலைகள் எல்லாம் கவனத்தில் எடுக்கப்பட்டே நிதர்சனமான விடயங்கள் அதில் சேர்க்கப்பட்டன.

இரசாயன உரங்கள், களை கொல்லிகள், அசேதன இரசாயன வகைகளைத் தவிர்த்து, முழுவதும் சேதனப் பொருள்களை மட்டும் பயன்படுத்தும் 'பசுமைப் புரட்சி' முறைமை அடுத்து பத்து ஆண்டுகளுக்குள் எட்டப்படும் என்றுதான் அந்த விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டது.

நாட்டின் வழமை நிலையைப் பாதிக்காமல், உச்சப் பட்ட முயற்சியும், தீவிர செயற்பாடும் மேற்கொண்டுதான் அதனை அவ்வளவு காலத்தில் எட்ட முடியும் என்பது நிபுணர்களின் கணிப்பு. அதற்குப் பத்து ஆண்டுகளாவது தேவை என்று ஆய்வுகள், வசதி, வாய்ப்புகளின் அடிப்படையில் கணித்தார்கள்.

ஆனால், ஆட்சி பீடமேறியதும் கோட்டாபயவின் கண்களை அதிகார வெறி மறைக்க, நிபுணர்களின் பரிந்துரையைத் தூக்கிக் கடாசி விட்டு 'மந்திரத்தில் மாங்காய் பறிக்கும் வேலையாக' தம் எதேச்சாதிகாரக் கைவரிசையை அதில் காட்டினார் அவர்.

ஒரு வருடத்துக்குள் அதை நடைமுறைப்படுத்தும் சாத்தியமேயற்ற முடிவை சர்வாதிகாரத் தீர்மானமாக எடுத்து, நாட்டின் மீது வல்வந்தமாகத் திணித்தார்.

அது சாத்தியமற்ற விவகாரம் என்பதை உணர்த்த முயன்ற அதிகாரிகளையும், புத்திஜீவிகளையும் தூக்கிக் கடாசினார். அவர் அதிகாரத்துக்கு வந்த பின்னர் விவசாய அமைச்சுக்கு ஐந்தாவது செயலாளர் இப்போது புதிதாக வந்திருக்கின்றார். இந்த வருடத்தில் இப்பதவிக்கு அவர் நாலாவது நபர்.

கோட்டாவின் 'சுபீட்சத்தின் நோக்கு' தேர்தல் விஞ்ஞாபனத்தில் விவசாயப் புரட்சி பற்றிய விடயங்களை வரைந்த பேராசிரியர் உடித் கே. ஜயசிங்கதான் கடைசியாக விவசாய அமைச்சிலிருந்து அதிரடியாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்.

படித்தவர்களையும், புத்திஜீவிகளையும் புறமொதுக்கி, முன்னாள் படையினருக்கு மட்டும் இடமளிக்கும் கோட்டாபயவின் இராணுவப் பாணி ஆட்சி நாட்டை முழுமையான ஒட்டாண்டி நிலையில் நிர்க்கதியாகப் போவது நிச்சயம்.

## ஜே.வி.பியுடன் கூட்டணி அமைக்க பேச்சு நடத்தும் ஆளும் தரப்பினர்!

### வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு



மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள தேசிய மக்கள் சக்தி கூட்டணியுடன் விமல் வீரவன்ஸ மற்றும் குமார் குணரட்னம் ஆகியோர் இணைய முடியும் என அந்த முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

எனினும் தேசிய மக்கள் சக்தி முன் வைக்கும் நிபந்தனைகளுக்கு இணங்கு வார்கள் என்றால், அவர்கள் கூட்டணியில் இணைந்து புதிய அரசாங்கத்தை அமைக்கும் போராட்டத்தில் இணைந்துகொள்ள முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

சிங்கள வலையொளித் தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் ஜயதிஸ்ஸ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுகதனவி மின் உற்பத்தி நிலையம் மற்றும் எரிவாயு விநியோகத்தை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கியமைக்கு எதிராக விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் நீதிமன்றத்துக்குச் சென்றமையை நான் வரவேற்கின்றேன்.

அதேபோல், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைவது தொடர்பாக பேசியமைக்கு தயாசிறி ஜயசேகரவுக்கு நன்றி கூறுகிறேன்.

இதனடிப்படையில், தேசிய மக்கள் சக்தி முன்வைக்கும் நிபந்தனைகளுக்கு இணங்கினால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு, மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து செயற்பட முடியும்.

ஊழல், மோசடிகளுக்கு எதிராக அரசாங்கத்துக்குள் இருந்துகொண்டு போராடும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பலர் ஏற்கனவே மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியுடன் பேச்சு நடத்தி வருகின்றனர்.

இவர்களில் உதவியைத் தீர்மானகரமான சந்தர்ப்பத்தில் நாங்கள் பெற்றுக்கொள்வோம். இதனடிப்படையில், தேசிய மக்கள் சக்தியின் நிபந்தனையை ஏற்கும் அனைத்து தரப்பினரையும் இணைத்துக்கொண்டு, எதிர் காலத்தில் மக்கள் சார்பான அரசாங்கத்தை அமைக்க மக்கள் விடுதலை முன்னணி நடவடிக்கை எடுக்கும் எனவும் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

## சமையல் எரிவாயு விநியோகம் தாமதம்

சமையல் எரிவாயுவை சந்தைக்கு விநியோகிப்பதில் தொடர்ந்தும் தாமதம் நிலவுகின்றது.

எரிவாயு தொடர்பில் மேலதிக பரிசோதனைகள் சிலவற்றை மேற்கொள்கின்றமையால் அதனை விநியோகிக்கும் நடவடிக்கையில் சிறிது தாமதம் ஏற்படக்கூடுமென்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

சமையல் எரிவாயு வெடிப்புச் சம்பவங்களை தொடர்ந்து எரிவாயு தரம் தொடர்பில் இலங்கை தரக் கட்டளை நிறுவனத்தால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

சமையல் எரிவாயுவின் தரம் தொடர்பில் முன்னர் மேற் கொள்ளப்பட்ட பரிசோதனைகளுக்கு மேலதிகமாக புதிதாக இன்னும் சில பரிசோதனைகள் முகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இதேவேளை, எரிவாயு சிலிண்டர்களில் கலவை காட்சிப் படுத்தப்பட்டுள்ள 12.5 கிலோ கிராம் எடையுடைய எரிவாயு சிலிண்டர்களை 3 ஆயிரத்து 500 ரூபாவிற்கு விற்பனை செய்யும் மோசடி இடம்பெற்று வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. புதிய சமையல் எரிவாயு சிலிண்டர் 2 ஆயிரத்து 765 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற நிலையில், எரிவாயு சிலிண்டர் 3 ஆயிரத்து 500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## பிரித்தானிய நாடாளுமன்றில் பொங்கல் விழா தமிழ் மரபு திங்கள் சிறப்பு நிகழ்வுகள் ஏற்பாடு

பிரித்தானியா நாடாளுமன்றத்தில் தைப் பொங்கல் விழா மற்றும் தமிழ் மரபு திங்கள் சிறப்பு நிகழ்வுகளை மேற்கொள்வதற்கான வேலைத்திட்டங்களில் ஈடுபட்டுள்ளோம் என பிரித்தானியா தமிழர் பேரவையினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களின் தொன்மையான வரலாறு, பாரம்பரியம், கலை, பண்பாடு, தொழிநுட்பம், அறிவியல், அரசியல் மற்றும் வாழ்க்கை நெறி என்பன உலகிற்கு செழுமை மிக்க பல விடயங்களைத் தந்துள்ளன.

இவ்வாறான சீரார்ந்த தமிழ் மரபின் நேர்த்தியை தமிழ் மக்களுக்கும் உலகிற்கும் எடுத்துச் செல்வதற்காக கட்டங்கட்டமாக சில பணிகளை பிரித்தானிய தமிழர் பேரவை ஆரம்பித்து வைத்தது.

அதன் முதற்கட்டமாக உழவர் திருநாளான தைப் பொங்கலை லண்டன் ஹரோ நகர கவுன்சிலில் 2010 ஆம் ஆண்டில் விழாவாக முன்னெடுத்தது.

வருடக்கணக்கான முயற்சிகளின் பலனாக அடுத்த கட்டமாக 2018 ஆம் ஆண்டு பிரித்தானிய நாடாளுமன்றத்தில் தை பொங்கல் விழா அறிமுகப்படுத்தப் பட்டதுடன் பல்வேறு கட்சிகளை சேர்ந்த முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு தமது ஈடுபாட்டையும், ஆதரவையும் தெரிவித்துக் கொண்டமையோடு இந்த நாட்டுக்கு தமிழ் மக்களின் பல்வேறு வகைப்பட்ட பங்களிப்புகளையும் விதந்துரைக்கத் தொடங்கினர்.

இதன் அடிப்படையில் கடந்த 2019ஆம் ஆண்டு நிகழ்வுகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட தலைப்பு 'தமிழ் இளையோர் தமது மரபுரிமை செழுமையை கொண்டாடுகின்றனர்' என்பதாகும்.

2020 ஆம் ஆண்டு 'தமிழ் மரபுத் திங்கள்' என்ற கருப்பொருள் அடிப்படையில் பிரித்தானியாவில் பிரபல்யப்படுத்தப்பட்டது.

இந்த அடிப்படையில் பலரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் காரணமாக அண்மையில் லண்டன் பெருநகர அவையில் தமிழரின் செழுமையைக் கொண்டாடும் வகையில் தமிழ் மரபுத் திங்கள் என்பதாக அறிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தை முழுமையாக ஆதரித்து வரவேற்பதுடன் இவ்வாறான தீர்மானங்களை பிரித்தானியா முழுவதும் கொண்டு வருவதற்கான வேலைத் திட்டங்களை பிரித்தானியா தமிழர் பேரவையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கான ஆதரவுத்தளத்தில், அனைத்து தமிழ் மக்களும் தமிழ் மரபியல் மாதத்தை பிரித்தானியா எங்கும் பிரபல்யப்படுத்துவதற்கு முன்வந்து பங்களிப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்வதுடன் இந்த வருடம் ஜனவரி மாதம் 17ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அனைத்து கொவிட் கட்டுப்பாடுகளுடன் தமிழர் உழவுத் திருநாளாம் தைப்பொங்கலையும், தமிழ் மரபியல் திங்களையும் பறைசாற்றி நிகழ்வைச் சிறப்புடன் மேற்கொள்வதற்கான வேலைத் திட்டங்களில் பிரித்தானியா தமிழர் பேரவையினர் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

வாழையடி வாழையாக வந்த தமிழ் மரபினையும், செம்மொழியாம் எம் தமிழ் மொழியின் சிறப்பினையும் எம் அடுத்த சந்ததியினருக்கும், உலக மாந்தருக்கும் எடுத்துச் செல்லும் முயற்சிகளுக்கு உந்து சக்தியாக இருப்போம் எனத் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# மண் மாபியாக்களின் கூடாரமாக மட்டுநகர் மாற இடமளிக்கக்கோம்!

## வியாழேந்திரன் காட்டம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் நாளுக்கு நாள் சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடவடிக்கைகளில் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த மாபியாக்கள் குவிந்து வருகின்றனர்.

எமது மண்வளத்தைச் சூறையாடுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. மட்டக்களப்பு மாவட்டம் மண் மாபியாக்களின் கூடாரமாக மாறிவிட இடமளிக்கக்கூடாது என இராஜங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தாவிட்டால் எமது மாவட்டத்தின் பல பிரதேசங்கள் அத்திப்பட்டி போல் அழிந்து போகும் நிலை காணப்படும் எனவும் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு – பங்குடாவெளி தளவாய் பிரதேசத்தில் நீர் விநியோக வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதாரம் மற்றும் உரிமைகள் சார்ந்து பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்பதற்கு மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் நாங்கள் அரசாங்கத்திடமிருந்து பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை ஜனாதிபதியின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்திற்கு அமைவாக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மக்களின் காலடிக்குக் கொண்டு சேர்த்துக் கொண்டிருக்கின்றோம்.

அதில் பின்தங்கிய கிராமப் புறங்களில் உள்ள அனைத்து வீதிகளும் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் மின்சாரம் இல்லாத கிராமங்களிலுள்ள அனைத்து வீடுகளுக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத் திட்டமும் மும்முரமாக முன்னெடுக்கப் பட்டுள்ளது.

அனைவருக்கும் குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் படுவான்கரை பிரதேசங்களைச் சார்ந்த கிராம பிரதேசங்களுக்குச் சுத்தமான குடிதண்ணீர் இல்லாமை பாரிய பிரச்சினையாகக் காணப் படுகின்றது.

இதற்குத் தீர்வு பெற்றுக் கொடுப்பதற்காக நீர்ப்பாசன செழுமை வேலைத்திட்டத்தின் கீழ் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதில் தளவாய், இலுப்பை சேனை, பெரிய புல்லுமலை, மரப்பாலம் மற்றும் ராஜபுரம் ஆகிய பிரதேசங்களில் குடி தண்ணீரைப் பெற்றுக் கொடுப்பதற்கான பாரிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பின்தங்கிய பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனூடாக முயற்சியாளர்கள் உருவாக்கப்படுகின்றனர்.

இவ்வாறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஒருபுறம் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் மறுபுறம் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மண் மாபியாக்களால் எமது மண் வளம் அளிக்கப் பட்டு வருகின்றது.

ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பதுளை வீதியைச் சேர்ந்த பல கிராமப்பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு பல அரசியல் பின்னணிகளைக் கொண்டு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் மணல் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு மணல் அகழ்வதற்காக அனுமதி வழங்கப்பட்டிருப்பது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காகவே அன்றி வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மண் மாபியாக்களின் ஆக்கிரமிப்புக்கு அல்ல. இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் மண் வளம் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மண் மாபியாக்களின் கூடாரமாக மாறிவிட்டது.

இவ்வாறு சட்டவிரோத மண் அகழ்விற்கு இடம் கொடுப்போமானால் இன்னும் 20 வருடங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல கிராமங்கள் அழியும் நிலை உருவாகும். தொடர்ந்து எம்மால் இந்த மாவட்டத்தின் மண்வளம் சூறையாடுவதற்கு இடம்கொடுக்க முடியாது. சட்டவிரோத மணல் அகழ்வுகளைத் தடுத்து நிறுத்த அரசாங்கத்தோடு இணைந்து செயற்பட்டு வருகின்றோம். எமது பிறந்த மண் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உணர்வோடு செயற்பட்டு வருகின்றோம். அரசியல் நோக்கங்களைத் தவிர்த்து மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளுக்குக் குரல் கொடுங்கள் எனத் தெரிவித்துள்ளார்.

## திருக்கோவில் சூட்டுச் சம்பவத்தில் பலியான பொலிஸாருக்குப் பதவியுயர்வு!

அம்பாறை – திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் பலியான 4 பொலிஸ் அதிகாரிகளுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அம்பாறை – திருக்கோவில் பொலிஸ் நிலையத்துக்குள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிசூட்டு சம்பவத்தில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிரிழந்துள்ளமையுடன், மூவர் படுகாயமடைந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில், இவ்வாறு உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக கடந்த 24 ஆம் திகதியுடன் அமுலாகும் வகையில் அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த பொலிஸ் அதிகாரிகளான கே. எல். எம். அப்துல் காதர், ஏ. நவிநாத், டி.பி.கே.பி. குணசேகர மற்றும் டி.எம்.டி.எச். புஷ்பகுமார ஆகியவர்களுக்கு இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அம்பாறை – திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் பொலிஸ் சார்ஜன் வீடுசெல்வதற்கு பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியிடம் விடுமுறை கோரியுள்ளமையுடன், விடுமுறை வழங்காததால் ஆத்திரமடைந்த பொலிஸ் சார்ஜன் இந்த துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார் என விசாரணையில் தெரிய வந்திருந்தது.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து குறித்த பொலிஸ் நிலையம் விசேட அதிரடிப்படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்ததுடன், துப்பாக்கிச் சூடு நடத்திய பொலிஸ் உத்தியோகத் தரும் கைது செய்யப்பட்டிருந்ததையும் குறிப்பிடத்தக்கது.



## திருமலை – கண்டி பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சாவு!

திருகோணமலை கண்டி பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லிப்பொத்தானை 96 ஆவது மைல் கல் பாலத்துக்கு அருகில் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை 5.55 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது, திருகோணமலையில் இருந்து சீமெந்து ஏற்றிக்கொண்டு சென்ற பார ஊர்தி ஒன்றும் மாத்தளையில் இருந்து மணல் ஏற்றியவாறு மறு திசையிலிருந்து வந்த டிப்பர் ரக வாகனமொன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. இந்நிலையில், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## வாகன இறக்குமதித் தடையால் நாட்டில் பாரிய நெருக்கடி நிலை!

2020 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் இலங்கையில் கொவிட் தொற்று பரவியதைத் தொடர்ந்து, ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக வாகன இறக்குமதி உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டில் வாகன இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்படமாட்டாது என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அடுத்த வருடம் இறுதி வரை தடை தொடரும் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நாட்டில் விதிக்கப்பட்டுள்ள வாகன இறக்குமதி தடையால் சிறிய டிரக்டர்கள் மற்றும் லொறிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வாகன இறக்குமதி தடையால் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வாக, குறைந்த விலையிலாவது வாகனங்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், அந்தச் சங்கம் தெரிவித் துள்ளது.

## மரணத்தில் முடிந்தது கிறிஸ்மஸ் விருந்து!

கொழும்பு, மட்டக்குளியில் இடம்பெற்ற நத்தார் கொண்டாட்டத்தின் போது வாள்வெட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் மட்டக்குளி பகுதியைச் சேர்ந்த 22 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். குறித்த இளைஞன் நத்தார் பண்டிகைக்காக நண்பர்களுடன் மதுபான விருந்து ஒன்று நடத்தியுள்ள நிலையில் அங்கிருந்த இளைஞர் ஒருவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

வாக்குவாதம் முற்றிய நிலையில் அந்த ,ளைஞனை கத்தியால் குத்தினார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இளைஞன் கொழும்பு தேசியவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டபின்னர்உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்குளி பொலிஸார் நடத்திய வருகின்றனர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 234

### 603. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் ஜே.ஆர். ஒப்பமிட்டமையை சிங்கள மக்கள் ஏற்று கொண்டர்களா?

1983 ஆம் ஆண்டின் பாரிய இனப்படுகொலைகளை நடத்தி முடித்திருந்த சிங்கள பேரினவாதம் மட்டுமல்ல; அதற்குப் பக்க பலமாக நின்ற ஜே.ஆரின் அரசு கூட ஒப்பந்தத்தை மனப்பூர்வமாக ஏற்கவில்லை, விரும்பவில்லை. ஆனால் அரசாங்கத்தின் தலைவர்கள் தங்களது கருத்து வேறுபாடுகளின் இடையிலும், இந்தியாவின் இந்து சமுத்திர பிராந்தியத்தின் ஆதிக்க பலத்தை உணர்ந்து ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் சேர்ந்து கழுத்தறுப்போம் என்ற அவர்களின் மன இயல்பு வைராக்கியம் பெற்றது. அதனை( ஒப்பந்தத்தை) ஏற்றுக்கெண்டார் எனக் காட்டிக் கொண்டாலும் ஜே.ஆர் அதற்கு விசுவாசமாக இருந்து இதய சுத்தியுடன்அதனை நடைமுறைப்படுத்தி தீர்வைக் காண விரும்பவில்லை.

சிங்கள தலைவர்களின் புரிந்துணர்



பிரேமதாஸா

வும், யதார்த்தமும் இந்தியப் பிராந்தியத்தை ஒட்டி அவர்கள் எடுத்த கணிப்பையும் தமிழ் மக்கள் கணக்கெடுக்கவில்லை. ஒப்பந்தம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவில்லை என பின் நின்ற விடுதலைப் புலிகள், இந்தியா ஸ்ரீலங்காவின் “உள்நாட்டு” விடயத்தில் தலையிடாது வெளியேற வேண்டும் என்று போர் தொடுத்து வெளியேற்றியமை வரலாறு.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் முழுமையான அதிகாரங்கள் சமஷ்டி அமைப்பில் வரவில்லை என ஆதங்கப்பட்டனர். விடுதலைப் புலிகளோ இந்தியா தலையிட்டமை, தமது இறைமையுள்ள தமிழ் ஈழப் போராட்டத்துக்கு குந்தகம் விளைவிக்கிறது, ஆகவே, அவர்கள் எப்படியும் அகற்றப்படவேண்டும் எனச் சிந்தித்தனர்.

ஐம்பது வருடங்களுக்கு மேற்பட்ட பேச்சுகள், போராட்டங்களின் பின்னும் இயலாத்தனத்தில் வெற்றுக் கையுடன் நின்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினர், முற்று முழுதாக எதற்கும் இந்தியாவிலேயே தங்கியிருந்தவர்கள். வருகின்றமை வாழைக்காய், கத்தரிக்காயாக இருக்கக்கூடாது. கொழுத்த ஆட்டுக் காலாகவாவது இருக்க வேண்டும் என ஆசைப்பட்டார்கள். விடுதலை புலிகளோ ஓர் அரசான ஸ்ரீலங்காவின் சாணக்கியத்தைப் புரிந்து கொள்ளாமல், அது அந்த ஒப்பந்தத்தை அமெரிக்காவின் புத்திமதியோடு ஏற்கிறது என்பதை அறிந்தும், தங்களது கனவுகளில் நம்பிக்கை வைத்தார்கள்.



தொண்டமான்

இன்று விடுதலைப் புலிகள் இல்லை. தமிழ் மக்களுக்கு அவர்கள் கொடுத்த பலமும் பல கூறுகளாகி புலம் பெயர் அறிக் கைகளாக வருகின்றன. சிங்கப்பூரில் தமிழ் மக்கள் கணிசமாக வாழ்ந்து அரசாங்கத்திலும் அதிகாரங்களுடனும் இருக்கும் நிலையில், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இயங்குபவர்கள் நாடு கடத்தப்படும் போது, வளரும் சர்வதேச கருத்து நிலைகளைக் கவனிக்க வேண்டும்.

அதே போல் கூட்டமைப்பின் நேச சக்திகள், அதன் உறவுகள், தாக்கங்கள் என்பவையும் ஆராயப்பட்ட நிலையில் தான் முன்னேறும் சிந்தனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அன்றைய பாரதப் பிரதமர் வி.பி.சிங் இந்திய படைகளின் வெளியேற்றத்துக்கு உத்தரவு தந்த பின் பாலசிங்கத்திடம் “நீங்கள் இனி பிரேமதாஸாவிடம் பேசித் தீர்வைப் பெற்றுக் கெள்ளுங்கள், ஆனால், இந்திய ஏற்படுத்திய மாகாண அதிகாரப் பரவல் முறையை ஈ.பி.ஆர்.எல்.எவ்வுடன் ஒற்றுமையாக செயற்படுத்துங்கள் அல்லது அவர்களாவது அதனை நடத்தி கொண்டிருக்கவிடுங்கள். அதற்கு ஆதரவு தருவோம்” என்று புத்திமதி தந்தார்.

ஆனால் இணைக்கப்பட்டு ஒன்றாக மாகாண சபை, சிதைக்கப்பட்டு வரதராஜ பெருமாளும் அதற்காக பணியாற்றியவர்களும் இந்தியாவில் அகதியானார்கள்.

### 604. இப்படி ஒரு பகுதியினரும் முழு மனதாக ஏற்கவில்லை என்றால் என்னதான் ஒப்பந்தத்திலோ, 13ஆம் திருத்தத்திலோ இருந்தது?

இந்தியா தனக்கு இந்திய பரப்பில் இருந்த அதிகாரத்தால் உள் நுழைந்து, கால் பதித்து, தடங்கள் ஏற்படப் போட்ட திட்டங்கள்தான் முக்கியமானவை. அதனது நோக்கங்கள் தெளிவாக இருந்தன. ராஜீவ் காந்திக்கும் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கும் இடையில் நடந்த செய்திக் கடிதப் போரையும் பார்த்தால் இந்தியாவின் நிலைப்பாடு, அதன் தொனி என்பவற்றைப் புரிந்து கொள்ளலாம்.

இவைக்கு 13ஆம் திருத்த ஏற்பாடுகள் கருவிகளாக்கப்பட்டன. ஆயின் இந்தியாவின் கால்பதிப்பை தடமாக்க அதனது யூபுநி அமைப்பு திட்டங்களை வரைந்திருந்தது. அவற்றைப் போர் காலங்களில் கூட அதன் உத்தியோகத்தர்கள் விடுதலைப் புலிகளின் தலைவர்களோடு கலந்துரையாடினர். அப்பொழுது இயங்கிக் கொண்டிருந்த யாழ்ப்பாண பிரஜைகள் குழு மற்ற சிவில் அமைப்புகளுடனும் கூட பிரஸ்தாபங்கள் இருந்தன. இந்தியா உள்ளிட்டதும், ஒப்பந்தம் ஏற்படுத்தியதும், பலத்த எதிரலைகளை சிங்கள பேரினவாதிகளிடையே ஏற்படுத்தியமையால் அவற்றைச் சமாளிக்க ஜே. ஆர். சிறுபான்மை இனத்தவர்களான சௌமியமூர்த்தி தொண்டமானையும், ஏ.ஸி.எஸ்.ஹமீதையும் இந்திய தரப்புகளோடு தன் பேச்சுகளுக்காக மிகவும் நம்பிப் பாவித்தார். ஹமீத் வெளிவிவகார மந்திரியாகவும் தொண்டமான் அரசின் பெரும் தூணாகவும், இந்திய அரசின் நம்பிக்கைக்குபாத்திரமானவராகவும் இருந்தார்.

பேரினவாதம், இந்திய ஒப்பந்தத்தால் இலங்கையின் இறைமை கையளிக்கப்பட்டு, நாடு துண்டாடப்பட்டு விட்டது, அதிகாரங்கள் பறி போய்விட்டன என்றே கூக்குரலிட்டன. ஆகவே, இன்றும் பேசப்படுவது போல ஜே.ஆர். இந்த மற்றங்களை சமாளிக்க, இந்திய வெளிப்படையாக சமஷ்டி என்றில்லாமலும், நாடு பிரிகிறது என்ற கோரிக்கைகளை கொடுக்காமல், அதிகாரம் அரசின் கையில் வைத்து, அது பரவலாக்கப்படுகிறது என்பதாகவே




ஹமீத்

வரைவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை தொண்டமான், ஹமீத் மூலம் வலியுறுத்தினர்.

நடந்து கொண்டிருந்த எதிர் பார்ப்புகளால் ஏற்படுத்தப்படும் சரத்துக்களில் சமஷ்டி என தெளிவாக்கினாலோ, கட்டுப்படுத்தப்படாத அதிகாரப் பரவலாக் கம் என காணப்பட்டாலோ அவை அரசமைப்புச் சட்டத்துக்கு அமைவாக சர்வ ஜன வாக்கெடுப்புக்கு விடப்பட்டால்



ஜே.ஆர்.



பாலசிங்கம்

தோற்கடிக்கப்படும், ஆகவே, அரசியல் சாணக்கியமும் நிதானமும் இதை ஒப்பேற்றிக்கொள்ள தேவை என வாதிக்கப்பட்டது. அவை 13ஆம் திருத்தத்தில் தாக்கங்களை தந்தன. இதனால் அது வெளிப்படையான சமஷ்டி என்றில்லாமல், ஒரு நாடு, அதிகாரம் என்ற போர்வையில் சமஷ்டிக்கான கட்டமைப்புக்கள் கொண்ட அதிகாரப் பரவலை உள்வாங்கியது. இந்தியா பல மாநிலங்களை கொண்ட ஒரு நாடு. அங்கு எல்லாவற்றிலும் அதிகாரப்பகிர்வு ஒரே விதமாக இருக்கிறது. அங்கே சமஷ்டி எனும் சொல் பாவிக்கப்படவில்லை. இவ்வாறே உலகத்தில் பல்லின மக்கள் வாழுகின்ற பல நாடுகளில் ஒற்றையாட்சி எனும் சொல்லும் சமஷ்டி எனும் சொல்லும் அரசியல் சாசனத்தில் இல்லை. ஆனால் அங்கெல்லாம் அதிகாரப்பரவல் காணப்படுகிறது.

தமிழ் மக்களுக்கு அதிகார பகிர்வுக்கான தேவை இருக்கிறது. மத்தியில் ஒற் றையாட்சியின் போதைகளில் குவித்து வைத்திருக்கும் அதிகாரங்களை தமிழ் மக்களுக்கும் கையளிப்பது பிரதான நோக்கமாக இருந்தது.

தொண்டமான் ஹமீத் மூலம் கொடுத்த வாக்குறுதிகளுக்கு ஜே.ஆர். விசுவாசமாக நடப்பார் எனவும் அவர் போட்ட வேங்களையும் ராஜீவ் நம்பினார். ஆனால் இந்தியாவின் அதிகாரத் தரப்புக்கள் தங்களது படைகள் நாட்டிற்குள் இருப்பதால் அவைகளின் வெளியேற்றத்துக்கு அர்த்த முள்ள அதிகாரப் பரவல்களையும், நிரந்தரமான வடக்கு கிழக்கின் இணைப்பையும் ஜே.ஆர். ஏற்படுத்த வேண்டும் என்ற திட்டங்களில் இருந்தார்கள். விடுதலைப் புலிகளின் இந்தியாவிற்கு எதிரான போர்க் கொடியும் தமிழர் விடுதலை கூட்டணியினர் இவற்றின் சஞ்சலத்தால் மாகாண சபைகளை ஏற்று நடத்த முன்வராதமையும் பின் ஜே.ஆரை தொடர்ந்ததும் அரசாட்சிக்கு வந்த சிங்கள பெரும்பான்மைக்கு வழிவகுத்து, இன்றைய ’ஒரு நாடு ஒரு சட்டம்’ என்பதற்குக் கொண்டு வந்துள்ளது. இந்தத் திசை திருப்பங்களுக்கு தமிழ் மக்கள் முக்கிய பங்காளிகள் ஆகிறார்கள்.

(வளரும்)

# அரசின் மலையக பிரதிநிதிகளுக்கு இயலுமை என்பதே கிடையாதா?

## வேலுகுமார் காட்டம்



'நுவரெலியா மாவட்டத்தில் புதிய பிரதேச செயலகங்களை உருவாக்கு வதற்குப் பதிலாக உப பிரதேச செயலக காரியாலயங்களைத் திறப்பதற்கு இடமளித்தமை, அரசில் உள்ள மலையக பிரதிநிதிகளின் இன்னுமொரு இய லாமையின் வெளிப்பாடே' என ஜன நாயக மக்கள் முன்னணியின் பிரதி தலைவரும் கண்டி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கை யில் –

மலையக மக்களின் அரசியல் மற் றும் நிர்வாக அதிகாரப் பகிர்வு தொடர்பாக அதிகம் பேச வேண்டிய, அதிகம் அக் கறை காட்டவேண்டிய கால கட்டத்தில் நாம் உள்ளோம்.

இவ்வாறான சூழ்நிலையில், நுவ ரெலியா மாவட்டத்தில், புதிய பிரதேச செயலகங்களை உருவாக்குவதற்குப் பதி லாக உப பிரதேச செயலக காரியால யங்களைத் திறப்பதற்கு இடமளித் தமை, அரசில் உள்ள மலையக பிரதிநிதி களின் இன்னுமொரு இயலாமையின் வெளிப்பாடே ஆகும்.

கடந்த நல்லாட்சியில், தமிழ் முற் போக்கு கூட்டணி மலையக மக்களின் தேங்கிக் கிடந்த அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதில் முனைப்புடன் செயற்பட்டது.

அதன் போது, அரசியல் அதிகாரப் பகிர்வு, அரச நிர்வாக அதிகாரப் பகிர்வு இரண்டையும் சமநிலையாகப் பெற்றுக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இலங்கையின் மிகப் பெரிய இரண்டு பிரதேச சபைகளாக இருந்த நுவரெலியா மற்றும் அம்பகமுவ பிரதேச சபைகளை, நுவரெலியா, அக்கரப்பத்தனை, கொட்டகலை, அம்பக முவ, மஸ்கெலியா மற்றும் நோர்வூட் என 6 பிரதேச சபைகளாகத் தரம் உயர்த் தினோம்.

அதன் மூலம் மலையக மக்களின் நீண்டகால அபிலாஷையாக இருந்த, அரசியல் அதிகாரப் பகிர்வை நாம் பெற்றுக்கொடுத்தோம். அதனைத் தொடர்ந்து, அரச நிர்வாக அதிகாரப் பகிர் வாகப் பிரதேச செயலகங்களை அதி கரிப்பதற்கான முடிவுகள் எட்டப்பட்டன.

அதற்கான அரச வர்த்தமானியும் வெளியிடப்பட்டது. அதன் மூலம் நுவரெ லியா மாவட்டத்திலிருந்த 5 பிரதேச செயலகப் பிரிவுகளை 10 பிரதேச செயலகப் பிரிவுகளாக அதிகரிப்பதற்கு வர்த்தமானி வெளியிடப்பட்டது.

அதற்கான ஆரம்பக்கட்ட வேலை களும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 2019 ஆட்சி மாற்றத்தின் பின், கடந்த இரு வருட காலத்தில், புதிய பிரதேச செயல கங்களை உருவாக்குவதற்கான வர்த்த மானி அறிவித்தலை நடைமுறைப் படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக் கப்படவில்லை. இன்றைய அரசாங்கத் தின் இரண்டு பாதீடுகள் முன்வைக்கப் பட்டுவிட்டன.

எனினும் அரசதரப்பில் உள்ளவர்கள், புதிய பிரதேச செயலகங்களை உரு வாக்குவதற்கு அவசியமான நிதியையும் ஏனைய வளங்களையும் பெற்றுக் கொள்வதற்குரிய எவ்வித நடவடிக்கை யும் எடுக்கவில்லை. இன்று, புதிய பிரதேச செயலகம் தொடர்பாக சமூகத் தில் கேள்விகள் எழத் தொடங்கிவிட்டன.

இதனை மூடி மறைப்பதற்காக, இன்று தலவாக்கலையில் உப பிரதேச செயலக காரியாலயம் திறக்கப்பட்டுள் ளது. இதன் மூலம் புதிய பிரதேச செயலக மொன்று உருவாக்கப்படுவது தடுக்கப் பட்டிருக்கின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் மலையக மக்களின் தசாப்தகால பிரச்சினையாக இந்தப் பிரச்சினை உள்ளது. இதனைத் தீர்ப்பதற்குப் பதிலாக இன்னும் பல தசாப் தங்களுக்கு இழுபறி நிலைக்குத் தள்ளும் செயற்பாடே இந்த உப பிரதேச செயலகக் காரியாலயம் ஆகும்.

தமிழ் முற்போக்கு கூட்டணி கடந்த அரசாங்கத்தில் புதிய பிரதேச செயலக பிரிவுகளை உருவாக்க அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. அதன் படி அரச வர்த்தமானியும் வெளியிடப் பட்டுள்ளது. அதனை, தற்போது அரசாங் கத்தில் உள்ளவர்கள், அழுத்தம் கொடுத்து, நடைமுறைப்படுத்துவது மட்டுமே உள்ளது.


அதைக் கூடச் செய்ய அரசாங்கத்தில் உள்ள மலையகப் பிரதிநிதிகளுக்கு இய லுமை இல்லையா? அல்லது, அவர் களின் வழமையான அசமந்த போக்கா இந்நிலைக்குக் காரணம்? அல்லது வழமைபோல மக்கள் பிரச்சினையை இழுத்தடிப்பு செய்து அரசியல் இலாபம் ஈட்டும் இன்னுமொறு நடவடிக்கையா? என்பதையே நாம் மக்கள் முன் கேள்வி யாக முன்வைக்கின்றோம் எனத் தெரி வித்துள்ளார்.

# ஜயசுந்தரவின் இராஜினாமா கடிதத்தை ஏற்றுக்கொண்டார் ஜனாதிபதி கோட்டா!

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பி.பி. ஜயசுந்தரவால் கையளிக்கப்பட்ட இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படு கின்றது.

இதனையடுத்து ஜனாதிபதியின் புதிய செயலாளராக பிரதமரின் தற்போதைய செய லாளர் காமினி செனரத் நியமிக்கப்படக் கூடு மெனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சர்களால் எழுப்பப்பட்ட ஆட்சேபனை களைத் தொடர்ந்து, அவரை பதவி விலகுமாறு வலியுறுத்தியிருந்த நிலையில் அவர் இராஜினா மாவைக் கையளித்திருந்தார்.



தான் பதவியில் இருந்த காலத்தில் எதிர் கொண்ட இடையூறுகளை விவரித்து, மூன்று அல்லது நான்கு பக்கங்கள் கொண்ட இராஜினா மாக் கடிதத்தை அவர் கையளித்திருந்தார்.

# 'அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம்' கொத்மலையில் தீப்பந்தப் போராட்டம்





எரிபொருள் விலை ஏற்றம் உள்ளிட்ட பிரச் சினைகளுக்கு அரசாங்கம் உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தி கொத்மலை தவலந்தென்ன நகரத்தில் தீப்பந்த போராட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொத்மலை பிரதேச அமைப்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தவலந்தென்ன பகுதியில் ஆரம்பமான இந்தப் போராட்டத்தில் 50 இற்கும் அதிகமான கட்சி ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கொத்மலை மற்றும் இறம்பொடை போன்ற பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த பலரும் ஒன்றிணைந்து அரசாங்கத்தைக் கண்டித்தும் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம் எனக் கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## 13 தங்கங்களை வென்ற தமிழ் மாணவிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாராட்டு





தேசிய ரீதியில் மருத்துவத்துறையில் அதிக தங்கப்பதக்கங் களைப்பெற்று சாதனை படைத்த அக்கரைப்பற்றைச் சேர்ந்த மாணவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்து பாராட்டி கௌரவித்தனர்.

கிழக்கு மாகாணம் அக்கரைப்பற்றை சேர்ந்த தமிழ் மாண வியான தணிகாசலம் தர்ஷிகா என்ற கொழும்பு பல்கலைக் கழக மாணவி மருத்துவத்துறை இறுதி பரீட்சையில் முதல் தரத்தில் தேர்ச்சி பெற்று 13 தங்கப்பதக்கங்களைப் பெற்று தேசிய ரீதியான சாதனை படைத்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பட்டமளிப்பு விழாவின்போது வழங்கப்படும் 37 தங்கப்பதக்கங்களில் சிறந்த மருத்துவ பீட மாணவ விருது உள்ளடங்களாக 13 தங்கப் பதக்கங்களை இவர் கைப்பற்றியுள்ளார்.

அவரது வீட்டுக்குச் சென்ற மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் ஆகியோர் மாணவியைப் பாராட்டிக் கௌரவித்தனர்.

இந்த நிகழ்வில் காரைதீவு பிரதேசசபையின் தவிசாளர் ஜெயசிறில், தமிழரசுக்கட்சி வாலிப முன்னணி உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்

காலைக்கதிர் Kalaikkathir

# ஒரே தெருவில் வசித்த இருவர் நோபல் பரிசு வென்ற வரலாறு!

நெல்சன் மண்டேலாவின் நெருங்கிய கூட்டாளி டெஸ்மண்ட் டுட்டு. இருவரும் சுவேட்டோ (Soweto) என்ற நகரில் உள்ள விலகாசி என்ற தெருவில் (Vilakazi Street) சிறிது காலம் அடுத்தடுத்த வீடுகளில் வசித்துள்ளனர். உலகில் ஒரே தெருவில் வசித்த இருவர் நோபல் சமாதானப் பரிசை வென்ற வரலாறு அந்தத் தெருவுக்கு இருக்கிறது.


முன்னாள் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் இருவரையும் ஹேக் நகரில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் நிறுத்துமாறு துணிந்து கேட்ட ஒரே மதத் தலைவர் டுட்டு. 2003 இல் ஈராக் நாட்டின் மீது போர் தொடுப்பதற்காக அதிபர் சதாம் ஹுசைய்ன் பேரழிவு ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கிறார் என்று இரு தலைவர்களும் பொய்கூறினர் என்று குற்றம் சுமத்தியே இருவரையும் அனைத்துலக நீதி மன்றத்தில் நிறுத்துமாறு டுட்டு கோரினார்.

ஈராக் மீது பொய் கூறித் தொடுக்கப்பட்ட அந்தப் போரே உலகில் இதற்கு முந்திய மோதல்கள் எதனையும் விட அதிகமாக உலகத்தின் ஸ்திரத் தன்மையைப் பாதித்துப் பிரிவினைகளையும் தோற்றுவித்தது என்பதை அவர் வலியுறுத்திக் கூறினார். ஈராக் போருக்கு முன்னரும் பின்னரும் அந்த மண்ணில் உயிரிழந்த பொது மக்களது எண்ணிக்கை ஒன்றே புஷ்ஷையும் பிளேயரையும் நீதியின் முன் நிறுத்துவதற் குப் போதுமானது என்று டுட்டு வாதிட்டார்.



விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்பாக உலகம் சித்திரித்தபோதும் தமிழர்களது பிரதிநிதிகளாகப் புலிகளைத் தன்னளவிலே அங்கீகரித்த முக்கிய உலகப் பிரமுகர்களில் ஒருவராக இருந்தவர். புலிகளது முக்கிய தலைவர்கள் பலருடன் தொடர்பை பேணியவர்.

இலங்கையில் இறுதிப் போரை நிறுத்துவதற்குத் தன்னாலான பல முயற்சிகளை இறுதிக் கணம் வரை முன்னெடுத்தவர். போரின் போதும் பின்னரும் இலங்கை அரசு மீது சர்வதேச அழுத்தத்தை உருவாக்க முயன்ற சக்திகளோடு நெருக்கமாகச் செயற்பட்டவர். இப்படி டெஸ்மண்ட் டுட்டுவின் வாழ்க்கைக்குப் பின்னால் பல கதைகள் இருக் கின்றன.



தென் ஆபிரிக்காவின் கேப் டவுண் (Cape Town) நகரில் காலமான அவருக்கு உலகெங்கும் இருந்து உணர்வுபூர்வமான அஞ்சலிச் செய்திகள் வெளியாகி வருகின்றன. மனித உரிமைகளுக் காகவும் மக்களது சமத்துவத்துக்காகவும் தனது வாழ்வை அர்ப்பணித்த வர் டுட்டு. நிற வெறிக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கும் தென் ஆபிரிக்காவின் நல்லிணத்துக்குமாக அவர் நடத்திய நீண்ட போராட்டம் என்றைக்கும் நினைவு கூரப்படும். – என்று பிரான்ஸ் அதிபர் எமானுவல் மக்ரோன் தனது செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார். நெல்சன் மண்டேலா நிறுவகம் (Nelson Mandela Foundation) விடுத்துள்ள அஞ்சலிக் குறிப்பில், அவரை 'ஓர் அசாதாரண மனிதப்பிறவி – ஒரு சிந்தனையாளர் – தலைவர் – ஒரு நல்ல மேய்ப்பர் ' என்று வர்ணித்திருக்கிறது. நிறவெறி எதிர்ப்புப் போராளியான மறைந்த மார்ட்டின் லூதர் கிங் (Martin Luther King) அவர்க ளது புதல்வியாகிய பேர்நீஸ் கிங் (Bernice King) விடுத்துள்ள செய்தியில், 'ஓர் உயர்ந்த' செல்வாக்கு மிகுந்த – உன்னத மனிதர் இப்போது நித்திய சாட்சியாகி விட்டார் 'என்று தெரிவித்திருக்கிறார்.

வத்திக்கானில் இருந்து புனித பாப்பரசர் அவர்களும் டுட்டுவின் மறைவுக்குத் தனது இரங்கலை வெளியிட்டிருக்கிறார். திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா தனது செய்தியில்,' வாழ்க்கை முழுவதுக்கும் அர்த்தத்துடன் வாழ்ந்த ஓர் ஆன் மீகவாதி டுட்டு' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

டுட்டுவுக்கு எழுந்து நின்று அஞ்சலி செலுத்துவதாகப் பலஸ்தீன விடுதலை இயக்கம் தெரிவித்திருக்கிறது. 'சுதந்திரம் மற்றும் விடுதலையை நோக்கிய தங்களது போராட்டத்தின் ஒரு தீவிரமான ஆதரவாளர் டுட்டு' – என்று ஹமாஸ் இயக்கத்தின் சிரேஷ்ட தலைவரான பசிம் நயீம் (Basim Naeem) கூறியிருக்கிறார்.

'பேராயர் டெஸ்மண்ட் டுட்டு, எனக்கும் இன்னும் பலருக்கும் சிறந்த நண்பராகவும், அறிவுரையாளராகவும் தார்மீக வழி காட்டியாகவும் விளங்கினார்' என்று அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பராக் ஒபாமா தெரிவித்திருக்கிறார். தென் ஆபிரிக்காவின் கேப் டவுண் நகரின் மலைப் பகுதியில் அமைந்துள்ள நகரசபைக் கட்டடம் பேராயர் டெஸ்மண்ட் டுட்டுவின் அங்கிலிக்கன் வர்ணமாகிய ஊதாப்பூ நிறத்தில் ஒளியூட்டப்பட்டிருந்தது. 1931 ஒக்ரோபர் 7 ஆம் திகதி பிறந்த டுட்டு, கேப் டவுண் நகரின் முதலாவது கறுப்பினப் பேராயர் என்ற பெருமைக்குரியவர்.

**பாரிஸிலிருந்து குமாரதாஸன்**

# பட்டினிச் சாவை எதிர்கொள்ளும் அபாய நிலைமையை தடுக்க உழைக்கும் மக்கள் வீதிக்கு இறங்கவேண்டும்!

## புதிய ஜனநாயக மாக்சிஸ லெனினிஸக் கட்சி அழைப்பு




இலங்கை பெரும் பஞ்சம் ஏற்படக்கூடிய அபாயக் கட்டத்தை நோக்கி நகர்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இதனால் பாதிக்கப்படும் சாதாரண மக்கள் பட்டினிச் சாவுகளை எதிர்கொள்ளும் அபாய நிலைக்குத் தள்ளப்படுவர்.

எனவே, இன்றைய மோசமான விலை உயர்வுகளாலும் பொருள்களின் தட்டுப்பாடுகளாலும் பாதிக்கப்பட்டு வரும் உழைக்கும் மக்கள் அனைவரும் வீதிக்கு இறங்க வேண்டிய தருணம் வந்துள்ளனர் என்றே எமது புதிய ஜனநாயக மாக்சிஸ லெனினிஸக் கட்சி நம்புகிறது.

இன்றைய ஆட்சியாளரின் மக்கள் விரோதப் போக்கைத் தட்டிக் கேட்கவும் தடுத்து நிறுத்தவும் மக்களின் ஒன்றுபட்ட போராட்ட அணிதிரள்வால் மாத்திரமே முடியும் என்பதே வரலாறு உணர்த்தும் பாடமாகும்.

இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிஸ லெனினிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில் –

ஏற்கனவே கொவிட் –19 கொரோனாவின் பெயரால் ராஜபக்ஷ குடும்பத்தினர் ஆட்சியைப் பல தில்லுமுல்லுகள் மத்தியில் முன்னெடுத்து வந்த அதேவேளை, கடும் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகி, அவற்றை நாட்டு மக்களின் தலைகளில் சுமத்தினர். அதன் விளைவே அரிசி, சீனி, கோதுமை மா, தானிய வகைகள், பால்மா, மருந்துகள் என்பனவற்றுடன் மரக்கறிகள், மீன், இறைச்சி போன்ற அன்றாட உணவுப் பொருள்களின் விலைகள் மக்களால் தாங்க முடியாத அளவுக்கு அதிகரித்து வந்துள்ளன. அத்துடன் எரிபொருள்களின் விலைகள், குறிப்பாக சமையல் எரிவாயுவின் விலை நாலாயிரத்தைச் சென்றடைந்தது. அது மட்டுமன்றி தட்டுப்பாடும் ஏற்படுத்தப்பட்டது. அதேவேளை விநியோகிக்கப்பட்ட எரிவாயு சிலிண்டர்கள் நாடு முழுவதிலும் வெடித்து மக்கள் படுகாயங்கள் அடைந்ததுடன் ஏழுபேர் கொல்லப்பட்டும் உள்ளனர். இவற்றுக்கு யார் பொறுப்பு?

இத்தகைய அவலங்கள் மத்தியிலே 23 ஆம் திகதி முதல் பெற்றோல் 20 ரூபாவாலும், டீசல் 10 ரூபாவாலும், மண்ணெண்ணெய் 10 ரூபாவாலும் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன. தாறுமாறான இந்த விலை அதிகரிப்பால் மீண்டும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் பல மடங்கு உயர்த்தப்படும் நிலை தோன்றியுள்ளது. அத்துடன் போக்குவரத்துக் கட்டணங்களும் உயர்த்தப்படும். இவை அனைத்தும் பற்றாக்குறைகளாகவும், கடன்களாகவும் சாதாரண உழைக்கும் மக்களின் தலைகளிலேயே சுமத்தப்படும்.

அதேவேளை நாட்டின் இன்றைய மோசமான பொருளாதார வீழ்ச்சிக்கும் சமூக நெருக்கடிகளுக்கும் இன, மத, பிரதேச பிளவுகளுக்கும் காரணமான, ஆட்சி அதிகாரத்தில் மாறிமாறி இருந்துவந்த அனைத்து ஆளும் வர்க்க சக்திகளும் எவ்வித பாதிப்புகளும் இன்றி சுகபோகமாகவே இருந்து வருகிறார்கள். இத்தகையவர்கள் ஆளும் தரப்புகளாக இருந்து வந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் குறுக்கு வழிகளில் சேர்த்த பல்லாயிரம் கோடி டொலர்கள் இன்றைய அந்நியக் கடன்களை மீளச் செலுத்தவும் டொலர் கையிருப்புக்கும் போதுமானதாகும். அத்துடன் நாட்டின் வளங்களை அந்நிய வல்லரசுகளின் முதலாளித்துவ சக்திகளுக்கு விற்று, நாட்டை நாசமாக்கும் தேவையும் ஏற்படாது.

இத்தகைய நிலையில் இந்தக் கும்பலில் இருந்து யார் பதவிக்கு வந்தாலும் இன்றைய நிலைமைகளைச் சீர்செய்ய முடியாது என்பதே யதார்த்தமாகும். எனவே, உழைக்கும் மக்களின் கைகளுக்கு அதிகாரம் வரக்கூடியதாக, மக்கள் சார்பான பரந்துபட்ட சக்திகள் ஒன்றிணைந்து போராட்டங்களை முன்னெடுப்பதையே சரியான தீர்வுக்கான வழியாக எமது கட்சி வலியுறுத்துகிறது.

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும் சைவ மாணவர் சபையும் இணைந்து நடத்திய மார்கழிப் பெருவிழா யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் 25,26ஆம் திகதிகளில் இடம்பெற்றது. அந்த நிகழ்வின் பதிவுகள்.**
























காலைக்கதிர் Kalaikkathir

# அரசால் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு அவப்பெயர்!

## மைத்திரி கடும் விசனம்



அரசின் செயற்பாடுகளால் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இந்நாள் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் நாட்டின் அரச இயந்திரத்தின் தன்மைக்கு ஏற்ற வகையிலேயே உதவிகளை வழங்கும். மனித உரிமை விவகாரங்கள், ஜனநாயகம், நீதிமன்றின் சுயாதீனத்தன்மை, பொலிஸ் திணைக்களத்தின் சுயாதீனத் தன்மை போன்ற காரணிகள் குறித்து அவதானிக்கப்படும்.

கடந்த காலங்களில் தொடுக்கப்பட்ட வழக்குகள் தற்போது தள்ளுபடி செய்யப் படுகின்றன.

நாம் மிகவும் நெருக்கடியான நிலையில் இருக்கின்றோம். இன்று எம்மைப் பாதுகாப்பதற்கு எவரும் முன்வரவில்லை.

ஊழல், மோசடிகள், வீண் விரயங்கள் மிகவும் அதிகரித்துள்ளன. அதிகாரம் ஒரு சிலருக்கு இடையில் மட்டும் பகிரப் பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமைகளைக் கருத்தில்கொண்டால் எந்தவொரு தரப்பும் எமக்கு உதவி செய்ய மாட்டார்கள் என்பதே யதார்த்தமாகும்.

சட்டம் – ஒழுங்கு, மனித உரிமை விவகாரங்களில் மோசமான நிலைமை காணப்பட்டால் எமக்கு எவரும் உதவ மாட் டார்கள் – என்றார்.

# இ.தொ.காவை அழைப்பது எமக்கு பிரச்சினை இல்லை

## மனோ எம்.பி. விளக்கம்



தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டத்துக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு அழைப்பு விடுக்கப்பட்டாலும் அது எமக்குப் பிரச்சினையாக அமையாது.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

'இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் - ஜனாதிபதி சட்டத் தரணி எம்.ஏ. சுமந்திரன் வழங்கும் நெகிழ்ச்சியான வரவேற்பு, மனோ கணேசனின் கொதி நிலையை மேலும் உயர்த்தும் என்பது நிச்சயம்' என்று 'காலைக் கதிர்' பத்திரிகை இன்று 'இனி இது இரகசியம் அல்ல' பகுதியில் சுட்டிக் காட்டியிருந்தது. அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் மனோ கணேசன் எம்.பி. கூறியுள்ளவை வருமாறு:-

அரசில் உள்ள கட்சிகள் எமது பொது நிலைப்பாடுகளுக்கு உடன்பாடு தெரிவித்தால், அவர்களையும் இப்போதே உள்வாங்குவதில்கூட எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. உண்மையில் இது ஏற்பாட்டாளர்களது பணி. வேறு எந்தவொரு கட்சி அரசியல்வாதி, சென்று இன்னொரு கட்சி அரசியல்வாதியை சந்திப்பது என்பது அவரவர் 'நிகழ்ச்சி நிரல்'. நாம் இதுபற்றி பற்றி அலட்டிக்கொள் ளவே இல்லை.

அப்படி பார்த்தால், இ.தொ.கா. போன்ற மலையகக் கட்சிகள் மட்டு மல்ல, நீண்டகாலமாக 13ஆவது திருத்தம் பற்றி பேசி வரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி., ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, எம்.பி. பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி, முன்னாள் எம்.பி. சந்திரகுமார் தலைமையிலான கட்சி போன்ற வடக்கு - கிழக்கு கட்சிகளும் நிறைய உள்ளன. இப்படி சில முஸ்லிம் கட்சிகளும் இருக்கலாம்.

ஆனால், முதல் வட்டத்தில் எதிரணி கட்சிகளையும், பின்னர் ஆளும் அணி கட்சிகளையும் அணுகலாம் எனக் கூட்ட ஏற்பாட்டாளர்கள் எமக்கு கூறினார்கள்.

அவர்களது கூற்றில் ஒரு நியாய ஒழுங்கு தெரிவதால், அதை நாம் ஏற்றுக்கொண்டோம். இது பற்றி ஏற் பாட்டாளர்களான ரெலோ கட்சியினர் தமது நிலைப்பாட்டைக் கூறியுள்ளனர். முதல் வட்டத்தில் வேண்டுமானாலும்கூட யாரும் அழைக்கப் பட்டும். எமக்கு இதுவொரு பிரச்சினையே இல்லை - என்றார்.

# வடக்கு - கிழக்கை இணைக்க ஒருபோதும் துணைபோகாதீர்!

## முஸ்லிம் கட்சிகளிடம் முஸ்தபா வலியுறுத்து

வடக்கு, கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் கட்சிகள் ஒரு போதும் ஆதரவு வழங்கக் கூடாது.

- இவ்வாறு முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் கூறியவை வருமாறு:-

தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றிணைந்து இந்திய அரசிடம் கடிதமொன்றை கையளிக்க முற்படுகின்றன. அந்தக் கடிதத்தில் வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.


எனவே, வடக்கு, கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் கட்சிகளின் ஆதரவைத் தமிழ்க் கட்சிகள் கோரினால், அதனை வழங்கவே கூடாது.

கிழக்குமாகாணத்தைவிடவும் அதிகளமான முஸ்லிம்கள் வெளி மாவட்டங்களில்தான் வாழ்கின்றனர். எனவே, புரிந்துணர்வு உடன்படிக்கைக்குச் செல்ல முன்னர் அனைத்து முஸ்லிம்கள் தொடர்பிலும் கட்சிகள் சிந்திக்க வேண்டும் - என்றார்.



# ஜனாதிபதியின் செயலர் மாற்றம்

## உறுதிப்படுத்தினார் கோட்டா



ஜனாதிபதி செயலாளர் பதவியில் மாற்றம் செய்யப்படும் என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதிப்படுத்தியுள்ளார்.

ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான நேற்றைய சந்திப்பின் பின்னர் மதிய போசனத்தில் தேசிய பத்திரிகை ஆசிரியர்கள் சிலருடன் நடந்த சிநேகபூர்வமான கலந்துரையாடலின்போது ஜனாதிபதி இந்தத் தகவலை வெளியிட்டார் என்று ஜனாதிபதி மாளிகைத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய ஜனாதிபதி செயலாளராக பிரதமரின் செயலாளர் காமினி செனரத் அல்லது நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் அநுர திஸாநாயக்க ஆகிய இருவரில் ஒருவர் நியமிக்கப்படலாம் என்று தகவல் வெளிவந்துள்ளது.

எவ்வாறாயினும், ஊடக நிறுவன பிரதானிகளுடன் நடந்த சந்திப்பின்போது, இது குறித்து உத்தியோகபூர்வ தகவல்கள் எதனையும் ஜனாதிபதி வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வீதியால் சென்ற சிறுவனைக் கத்தியால் குத்தி விட்டுத் தொலைபேசி கொள்ளை!

## யாழ்ப்பாணத்தில் பட்டப்பகலில் பயங்கரம்

வீதியால் சென்றுகொண்டிருந்த சிறுவனை வழிமறித்து, கத்தியால் குத்திவிட்டு தொலைபேசியைக் கொள்ளையிட்டு சென்ற வழிப்பறிக் கொள்ளை கும்பலைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

குறித்த கொள்ளைச் சம்பவம் சுன்னாகம் - தாவடி பகுதியில் கடந்த சனிக்கிழமை பகல் இடம்பெற்றுள்ளது.

மருதனார்மடம் பகுதியைச் சேர்ந்த 16 வயதான சிறுவன் ஒருவன் தொலை பேசியில் பேசியபடி அன்றைய தினம் சைக்கிளில் சென்றுள்ளார்.

இதன்போது அவ்வழியால் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் குறித்த சிறுவனைக் கத்தியால் குத்திவிட்டு தொலைபேசியைப் பறித்துச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சிலைகளைக் கடத்தியவர்கள் ஜனவரி. 5 வரை விளக்கமறியலில்

## 20 இற்கும் மேற்பட்ட சிலைகளும் மீட்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., வலிகாமம் வடக்கில் உள்ள ஆலய விக்கிரகங்களைக் கடத்தி விற்பனை செய்து வந்த இருவரையும் எதிர்வரும் 5ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு, மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வலி. வடக்கு பிரதேசத்தில் உள்ள ஆலயங்களில் இருந்த பிள்ளையார் உள்ளிட்ட இந்து கடவுள்களின் விக்கிரகங் களைக் கடத்தி கொழும்பில் விற்பனை செய்த குற்றச்சாட்டில் கீரிமலை - நல்லிணக்கபுரம் மற்றும் புத்தூர் - நவக்கிரி பகுதிகளைச் சேர்ந்த இருவர் கடந்த 24ஆம் திகதி காங்கேசன்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கடந்த 9ஆம் திகதி முதல் 23ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில், கொழும்புக்குக் கடத்தி விற்பனை செய்யப்பட்ட சிலைகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், கொழும்பு விரைந்த பொலிஸ் குழுவினர் 25ஆம் திகதி கொழும்பில் விற்பனை செய்யப்பட்ட 20 சிலைகளை மீட்டு வந்தனர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை சந்தேகநபர்களை மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியதை அடுத்து, அவர்களை எதிர்வரும் 5ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# நீர்வேளாண்மையை விஸ்தரிக்க அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை!

நீர்வேளாண்மை மூலமான உற்பத்திகளை விஸ்தரிக்கும் நோக்கில் வங்கிக் கடன் வசதிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.


அதனடிப்படையில், சமுர்த்திப் பயனாளர்களாக இருக்கும் கடற்றொழிலாளர்கள் சமுர்த்தி வங்கியின் ஊடாக தலா 50 லட்சம் ரூபா வரையிலான கடனையும், பிரதேச அபிவிருத்தி வங்கியின் மூலம் சுமார் 250 லட்சம் ரூபா வரையிலான கடனையும் பெற்று நீர்வேளாண்மை செயற்பாடுகளுக்கான ஆரம்ப முதலீடுகளாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் கடற்றொழிலாளர்களின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர்கள், கடற்றொழில்சார் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் கடற்றொழில் சங்கங்கள் மற்றும் சமாசங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டுதங்களது பிரச்சினைகளை வெளிப்படுத்தினர். இதன்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்–

நீர்வேளாண்மை எனப்படும் நன்னீர் மீன் வளர்ப்பு, பருவகால மீன் வளர்ப்பு மற்றும் கொடுவா மீன், இறால், நண்டு, கடலட்டை போன்ற பண்ணை வளர்ப்புத் திட்டங்களை விருத்தி செய்வதன் மூலம் வடக்கு மாகாணத்தில் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் தீவிர முயற்சிகள் மேற்கொண்டுள்ளதாகவும், அதற்கு பிரதேச அபிவிருத்தி வங்கி மற்றும் சமுர்த்தி வங்கி ஆகியவற்றின் கடன் திட்டங்கள் பக்கபலமாக இருக்கும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.



இதனிடையே வடக்கில் இதுவரை உருவாக்கப்பட்டுள்ள அனைத்து கடலட்டைப் பண்ணைகளும் அந்தந்தப் பிரதேச மக்களுக்கே வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்திருந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் குறுகிய நலன்கொண்ட அரசியலுக்காக தென்னிலங்கை மக்களுக்கு கடலட்டைப் பண்ணைகள் வழங்கப்படுகின்றன எனப் பொய்யான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார் எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேவேளை, தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு கடலட்டைப் பண்ணைகளை வழங்கக் கூடாது என எந்த வகையான எண்ணமும் தன்னிடம் இல்லை என்று தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய அமைச்சராகப் பணியாற்றுகின்ற தான், ஒவ்வொரு வேலைத் திட்டங்களிலும் அந்தந்தப் பிரதேச மக்களுக்கே முன்னுரிமை அளிப்பதாக தெரிவித்ததுடன், தென்னிலங்கை மாவட்டங்களில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த மக்கள் பல்வேறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமையையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை, நிபந்தனைகளை மீறித் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் உள்ளூர் இழுவைமடித் வலைத் தொழிலாளர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இழுவைமடி வலைத் தொழிலில் ஈடுபடுகின்ற குருநகர் மற்றும் வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் 'இழுவைமடி வலைத் தொழில் இலங்கையில் தடைசெய்யப்பட்ட தொழில் முறையாகும். இருப்பினும் உள்ளூர் மீனவர்களின் நலன் கருதி குறித்த சட்டத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதுவரையில், நாரா எனப்படும் தேசிய நீரியல்வள ஆராய்ச்சி முகவர் நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் மாத்திரம் நிபந்தனைகளின் அடிப்படையில் தொழிலில் ஈடுபட முடியும்.

ஆனால், நிபந்தனைகளை மீறி, ஏனைய தொழிலாளர்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் வகையில் தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனச் செய்திகள் கிடைக்கின்றன.

குறித்த நிபந்தனைகளை மீறுகின்றவர்களுக்கு எதிராக கடுஷ்மான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அவ்வாறானவர்கள் தொழிலில் ஈடுபட முடியாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருக்கோவில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் கைதான சார்ஜனிடம் தொடர் விசாரணை!

*அம்பாறை - திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில், துப்பாக்கிச்சூடு நடத்திய பொலிஸ் உத்தியோகத்தர் வழங்கிய வாக்குமூலம் தொடர்பாக, மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.*

*கடந்த வெள்ளிக்கிழமை இரவு பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிரிழந்துள்ளமையுடன், இருவர் காயமடைந்தனர்.*

*இந்த நிலையில், கைதுசெய்யப்பட்ட துப்பாக்கிச்சூடு மேற்கொண்ட பொலிஸ் உத்தியோகத்தரிடம், பொலிஸார் தொடர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

*தமது தாயாரைப் பார்ப்பதற்காக வீட்டுக்கு செல்வதற்கு விடுமுறை கிடைக்கப்பெறாமை காரணமாக, குறித்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டார் என சந்தேகநபர் விசாரணைகளில் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகிறார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.*

*எனினும் குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு இறுதியாக ஏழு நாள்கள் விடுமுறை வழங்கப்பட்டிருந்ததாக விசாரணைகளை மேற்கொள்ளும் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.*

*அத்துடன் ஒவ்வொரு மாதமும் அவர் விடுமுறை பெற்றுள்ளார் எனவும் விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த நிலையில், அவரின் வாக்குமூலம் தொடர்பாகப் பொலிஸ் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.*

*இதேவேளை, உயிரிழந்த நான்கு பொலிஸ் அதிகாரிகளுக்கும் பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*அதற்கமைய, மறைந்த பொலிஸ் அதிகாரிகளான கே.எல்.எம்.அப்துல்காதர், ஏ.நவிநாத், டி.பி.கே.பி.குணசேகர மற்றும் டி.எம்.டி.எச். புஷ்பகுமார ஆகியோருக்கே இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.*

## மத்திய வங்கி ஆளுநர் மற்றும் நிதி அமைச்சு செயலாளர் ஆகியோருக்கு அமைச்சரவைக் கூட்டத்துக்கு அழைப்பு!

அமைச்சரவைக் கூட்டத்துக்கு மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை எதிர்நோக்கியுள்ள வெளிநாட்டு ஒதுக்கம் தொடர்பான பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பிரச்சினை தொடர்பில், ஒன்றிணைந்த கலந்துரையாடலை நடத்துவதற்காக, மத்திய வங்கி ஆளுநரையும் நிதி அமைச்சின் செயலாளரையும் அமைச்சரவைக் கூட்டத்துக்கு அழைக்க முன்னதாக இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.12.2021 இல் வெளியிடப்பெற்றது.